DEPOSITION OF WITNESS

**(Chapter of XXIII, Criminal Procedure Code)**

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, CHENNAI.

**Spl.S.C.No. 1/2024**
PROSECUTION WITNESS No.22

| | | |
|---|---|---|
| Name | : | K.P.Ganesan |
| Father's Name | : | Kaliyuga Pandian |
| Age | : | 52 |
| Address | : | |

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 on the 23rd day of September, 2025.

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை:–**

நான் தற்போது திருநெல்வேலி மாநகர நில அபகரிப்பு தடுப்பு பிரிவில் குற்றப்பிரிவு உதவி ஆணையராக பணிபுரிந்து வருகிறேன். 16.01.2012 ம் தேதி நான் புழல் காவல் நிலைய ஆய்வாளராக பணிபுரிந்தபோது காவல் நிலைய உதவி ஆய்வாளர் பிரேமச்சந்திரன் என்பவர் பதிவு செய்து வைத்திருந்த புழல் காவல் நிலைய குற்ற எண் 112/2012 சட்டப்பிரிவு 176 கு.வி.மு.ச. முதல் தகவல் அறிக்கையை நான் பெற்று விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.14,** அந்த முதல் தகவல் அறிக்கையில் உள்ள கையொப்பம் உதவி ஆய்வாளர் பிரேமச்சந்திரனுடையது அவர் என்னுடன் பணிபுரிந்து உள்ளதால் அவர் கையொப்பம் எனக்கு பரிட்சயம். 17.01.2012 அன்று இறந்துபோன நித்தியராஜ் என்பவர் பிரேத விசாரணைக்காக ஒரு நடுவரை நியமிக்கும்படி

தலைமை பெருநகர குற்றவியல் நடுவர் அவர்களுக்கு வேண்டுகோள் விண்ணப்பம் கொடுத்தேன் அந்த விண்ணப்பம் என்னிடம் காட்டப்படுவதுதான் அது **அ.சா.ஆ.15.** அன்றையதினமே 5 வது பெருநகர குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்கள் பிரேத விசாரணை முடித்து பிரேதப் பரிசோதனைக்கு உடலானது அனுப்பப்பட்டது. பிரேத பரிசோதனைக்கு பிறகு உடலானது உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது. 12.03.2012 அன்று 5 வது பெருநகர குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களது அறிக்கை பெறப்பட்டது. இந்நிலையில் எனக்கு பணி மாறுதல் வந்ததால் வழக்குகோப்பினை நான் பின்னர் வந்த ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். 30.09.2022 அன்று சிபிசிஐடி துணைக் கண்காணிப்பாளர் அவர்கள் விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை:-</u>**

**<u>மறுவிசாரணை</u>** :- இல்லை.

| |
|---|
| Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct. |
| **Principal Judge** |

DEPOSITION OF WITNESS

**(Chapter of XXIII, Criminal Procedure Code)**

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, CHENNAI.

**Spl.S.C.No. 1/2024**

PROSECUTION WITNESS No.23

| | |
|---|---|
| Name | : S.Jayaraman |
| Father's Name | : Subbiah |
| Age | : 64 |
| Address | : |

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 on the 23rd day of September, 2025.

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை:–**

நான் தற்போது சிறை அலுவலராக இருந்து ஓய்வு பெற்றுள்ளேன். 04.03.2016 முதல் 26.04.2018 வரை புழல் மத்திய சிறையில் சிறை அலுவலராக பணிபுரிந்தேன். அப்போது சிபிசிஐடி குற்ற எண் 2/2017 நாள் 09.05.2017 நாளிட்ட கடிதத்திற்கு இணங்க சிறைக் காவலில் இருந்த சிறைவாசி நித்தியராஜ் என்பவர் இறந்தது சம்பந்தமாக புழல் மத்திய சிறை கண்காணிப்பாளர் அவர்களின் கடிதம் எண் 32005 த.கு.நாள் 06.06.2017 ஆணைப்படி சிபிசிஐடி காவல் நிலையத்திற்கு 1. காவலர்கள் கடமைப் பதிவேடு 29.05.2011 முதல் 31.01.2012 வரை. 2. காவலர்கள் கடமைப் பதிவேடு 15.01.2012 முதல் 31.01.2012 வரை. 3.இரவு அலுவலர் அறிக்கை புத்தகம் நாள் 28.12.2011 முதல் 01.12.2012 வரை. 4.மருத்துவ அறிக்கை பதிவேடு 26.09.2011 முதல் 24.04.2012 வரை. 5. காவலர்கள் காலை

கடமைப் பதிவேடு, காவலர்கள் வருகைப்பதிவேடு, காவல் அடைப்பு பதிவேடு, 15.08.2011 முதல் 03.06.2012 வரை. 6.அலுவலர் சுற்றுப் பதிவேடு 21.04.2011 முதல் 12.04.2013 வரை. 7.சிறைவாசிகள் சரிபார்க்கும் பதிவேடு 23.12.2011 முதல் 25.01.2012 வரை. இந்தப் பதிவேடுகள் அனைத்து சிபிசிஐடி அலுவலகத்திற்கு அனுப்பி வைத்தேன். அதன்பின்பு 14.11.2022 சிபிசிஐடி அலுவலத்தில் காவல் துணைக் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் ஆஜராகி விசாரணைக்கு பதில் அளித்தேன். அந்தப் பதிவேடுகள் என்னிடம் காட்டப்படுவதுதான் அவை அ.சா.ஆ.16 வரிசை(10 பதிவேடுகள்)

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை:-</u>**

**<u>மறுவிசாரணை</u>** :- இல்லை.

| |
|---|
| Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct. |
| **Principal Judge** |